# வாக்களிப்பது எப்படி

தமிழ்

# உள்ளடக்கம்

வாக்களிப்பது எப்படி / தமிழ்

# வாக்களிப்பது எப்படி

## தகைமைகள்

நீங்கள் பின்வருமாறு இருந்தால் ரொறன்ரோவின் மாநகரத் தேர்தலில் வாக்களிக்கலாம்:

- ஒரு கனேடியப் பிரசையாக இருத்தல்; அத்துடன்
- குறைந்த பட்சம் 18 வயதுள்ளவராக இருத்தல்; அத்துடன்
- ரொறன்ரோ நகரின் ஒரு குடியிருப்பாளராக இருத்தல்; அல்லது
- ரொறன்ரோவின் ஒரு குடியிருப்பாளர் அல்லாதவராக இருத்தல், ஆனால் நீங்கள் அல்லது உங்களது துணைவர் நகரில் சொத்துக்களை உரிமை கொண்டிருத்தல் அல்லது வாடகை கொண்டிருத்தல்; அத்துடன்
- ஏதேனும் சட்டத்தின் கீழ் வாக்களிக்கத் தடுக்கப்படாதிருத்தல்.


நீங்கள் நகரினுள் எத்தனை சொத்துக்களை வைத்திருக்கிறீர்கள் அல்லது வாடகைக்கு விட்டிருக்கிறீர்கள் என்றாலும், நீங்கள் ரொறன்ரோ நகர மாநகர சபைத் தேர்தலில் ஒரு முறை மாத்திரமே வாக்களிக்கலாம். நீங்கள் வசிக்கும் குறிச்சியிலேயே வாக்களித்தாக வேண்டும்.

## வாக்களிப்பு

தேர்தல் உத்தியோகத்தர் செய்வதாவது:

- வாழத்துக் கூறி, நீங்கள் எங்கு செல்ல வேண்டுமெனப் பணித்தல்
- உங்களது பெயர், தகுதியாக்கும் ரொறன்ரோ விலாசம் என்பவற்றைக் கொண்ட உங்களது அடையாள அட்டையைக் கேட்டல்
- உங்களது அடையாள அட்டையை வாக்காளர் பட்டியலில் பரிசோதித்து, பட்டியலில் உங்களது பெயரை வெட்டி விடுதல்
- உங்களது வாக்குச் சீட்டை ஒரு இரகசியக் காப்புறையிலிட்டு, உங்களது வாக்குச் சீட்டில் எவ்வாறு அடையாளமிடுவதெனக் காட்டுதல்
- உங்களுக்கு வாக்களிப்புத் திரைக்கு வழி காட்டுதல்

நீங்கள் செய்யப் போவது:




- நீங்கள் தெரிவு செய்யும் வேட்பாளரின் வலப்புறமுள்ள முட்டை வடிவத்தை நிரப்புவதன் மூலம் உங்களது வாக்குச் சீட்டை அடையாளமிடுங்கள்.
- ஒவ்வொரு பதவிக்காகவும் வாக்குச் சீட்டில் ஒவ்வொரு முறை வாக்களியுங்கள்
    - நீங்கள் ஒரு தவறிழைத்தால், அல்லது நீங்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதில் உங்களது மனத்தை மாற்றிக் கொண்டால் வாக்குச் சீட்டை தேர்தல் அதிகாரியிடம் கொண்டு செல்லுங்கள், அவர் உங்களது வாக்குச் சீட்டை இரத்துச் செய்து உங்களுக்கு மற்றொன்றை வழங்குவார்.
- உங்களது அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டை இரகசியக் காப்புறையிலிட்டு, உங்களது வாக்குச் சீட்டை வாக்குப் பெட்டியிலிடக்கூடிய தேர்தல் அதிகாரியிடம் அதனைக் கொண்டு செல்லுங்கள்
    - உங்களது வாக்குச் சீட்டில் ஏதேனும் பிரச்சினையிருந்தால், வாக்குப் பெட்டி அதனை வெளித் தள்ளி விடும். தேர்தல் உத்தியோகத்தர் உங்களுக்கு ஒரு புதிய வாக்குச் சீட்டைப் பெறும் அல்லது அட்டவணையாக்கி உங்களது வாக்குச் சீட்டை அடையாளமிட்டதாக ஏற்கும் தெரிவை உங்களுக்கு வழங்குவார்.

  - வாக்குச் சீட்டில் சரியாக அடையாளமிடுவது எப்படியென்பதைப் பற்றி உங்களிடம் எவையேனும் கேள்விகளிருந்தால், தேர்தல் அதிகாரிகளில் எவரும் அதனை உங்களுக்கு விளக்குவதில் மகிழ்ச்சியடைவார்.
- உங்களது வாக்குச் சீட்டு வாக்குப் பெட்டியால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் வெற்றிகரமாக வாக்களித்திருப்பீர்கள்

# பிரகடனம்

## இல. 1 - தகைமைப் பிரகடனம்

எவரேனும் உங்களது வாக்களிப்பு உரிமையைக் கேள்விக்குள்ளாக்கினால், நீங்கள் தகுதி பெறுகிறீர்களென்பதை உறுதிப்படுத்துவதற்காக, நீங்கள் தகைமைப் பிரகடனமொன்றில் சத்தியமிட்டாக வேண்டும். (பார்க்க: தகைமைகள்)

> (உங்களது பெயரைக் குறிப்பிடுங்கள்) ஆகிய நான் தகைமையுள்ள ஒரு வாக்காளர் எனவும் நான் ஏற்கனவே இத்தேர்தலில் வாக்களிக்கவில்லை எனவும் பிரகடனப்படுத்துகிறேன்.

## இல. 2 - உரைபெயர்ப்பாளரின் பிரகடனம்

உங்களுக்கு உரைபெயர்ப்பாளர் ஒருவரின் உதவி தேவைப்படின், ஒரு போட்டியாளரோ அல்லது ஒரு கண்காணிப்பாளரோ அல்லாத எவரையும் உங்களது உரைபெயர்ப்பாளராகப் பணியாற்றுமாறு நீங்கள் கேட்கலாம்.

உரைபெயர்ப்பாளர் உதவி வழங்க முன்னர் ஒரு பிரகடத்தில் சத்தியமிட்டாக வேண்டும். அவர்கள் உங்களுடன் வாக்களிப்புத் திரையின் பின்னால் செல்லக் கூடாது.

> (உங்களது பெயரைக் குறிப்பிடுங்கள்) ஆகிய நான் ஒரு எந்தவொரு பிரகடனத்தையும், ஆவணத்தையும் அல்லது தேர்தல் அதிகாரியை நோக்கி எழுப்பப்படும் எந்தவொரு கேள்வியையும், பதிலையும் உண்மையாக மொழிபெயர்ப்பேனென்று பிரகடனப்படுத்துகிறேன்.

## இல. 3 - ஒரு வாக்காளரின் நண்பரின் பிரகடனம்

உங்களால் ஒரு வாக்குச் சீட்டில் அடையாளமிட முடியாவிடின், நீங்கள் உங்களுக்கு உதவுமாறு ஒரு நண்பரிடம் கேட்கலாம். நண்பர் ஒரு பிரகடனத்தில் சத்தியமிட்டாக வேண்டும். ஒரு நண்பராகச் செயற்படுபவர் உங்களுடன் வாக்களிப்புத் திரைக்குப் பின்னால் செல்லக் கூடாது. மருத்துவமனைகளில் அல்லது குடும்ப உறுப்பினர்களுக்காகவே தவிர ஒருவர் ஒரு முறை மட்டுமே ஒரு நண்பராகச் செயற்படலாம்.

(உங்களது பெயரைக் குறிப்பிடுங்கள்) ஆகிய நான் பின்வருவனவற்றைச் செய்வேனெனப் பிரகடனப்படுத்துகிறேன்:

- வாக்காளரால் பணிக்கப்பட்டவாறு வாக்குச் சீட்டில் அடையாளமிடுதல்
- வாக்காளர் தனது தெரிவை மேற்கொள்வதில் அவரிடம் செல்வாக்குச் செலுத்த முனையாதிருத்தல்
- வாக்காளர் எவ்வாறு வாக்களித்தார் என்பதைப் பற்றி இரகசியம் பேணுதல்

# அடையாள அட்டை உதாரணங்கள்

**உங்களது பெயர், தகுதியாக்கும் ரொறன்ரோ விலாசம் என்பவற்றைக் காட்டும் அடையாள அட்டை வாக்காளர் தகவலட்டையை அடையாள அட்டையாகப் பயன்படுத்த முடியாது.**

- ஒன்ராறியோ சாரதி அனுமதிப்பத்திரம்
- ஒன்ராறியோ சுகாதார அட்டை (விலாசத்துடனான ஒளிப்பட அட்டை)
- ஒன்ராறியோ ஒளிப்பட அட்டை
- ஒன்ராறியோ மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் (வாகனப் பகுதி)
- இரத்தாக்கப்பட்ட தனிப்பட்ட காசோலை
- ஒன்ராறியோவிலுள்ள சொத்து தொடர்பான ஒரு அடகுக் கூற்று, குத்தகை அல்லது வாடகை ஒப்பந்தம்
- காப்புறுதி ஒப்பந்தம் அல்லது காப்புறுதிக் கூற்று
- கடன் ஒப்பந்தம் அல்லது ஒரு நிதி நிறுவனத்துடனான ஏனைய நிதியியல் ஒப்பந்தம்
- ஒன்ராறியோவிலுள்ள ஒரு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அல்லது சான்றுபடுத்தப்பட்ட ஆவணம்
- கனடா அரசாங்கத்தின், ஒன்ராறியோவின் அல்லது ஒன்ராறியோவிலுள்ள ஒரு நகராட்சியின் அல்லது ஒரு அரசாங்க நிறுவனத்தின் அல்லது அது போன்றதன் மூலம் வழங்கப்பட்ட வேறேதேனும் ஆவணம்
- இந்தியச் சட்டம் (கனடா) என்பதன் கீழ் நிறுவப்பட்ட ஒன்ராறியோவிலுள்ள ஒரு கோத்திரச் சபையின் மூலம் வழங்கப்பட்ட ஏதேனும் ஆவணம்
- வருமான வரிக் கணிப்பீட்டு அறிவித்தல்
- சிறுவர் வரி நலக் கூற்று
- தொழிற் காப்புறுதி நலனளிப்புக் கூற்று T4E
- முதியோர் பாதுகாப்புக் கூற்று T4A (OAS)
- கனேடிய ஓய்வூதியத் திட்ட நலன் கூற்று T4A (P)
- கனேடிய ஓய்வூதியத் திட்டப் பங்களிப்புக் கூற்று
- ஒன்ராறியோ வேலைகளுக்கான நேரடி வைப்புக் கூற்று
- ஒன்ராறியோ ஊனமுற்றோர் ஆதரவுத் திட்டத்துக்கான நேரடி வைப்புக் கூற்று
- வேலையிடப் பாதுகாப்புக்கும் காப்புறுதிக்குமான சபையின் நலக் கூற்று T5007
- சொத்து வரிக் கணிப்பீடு
- கடனட்டைக் கூற்று, வங்கிக் கணக்குக் கூற்று, அல்லது RRSP, RRIF, RHOSP அல்லது T5 கூற்று
- CNIB அட்டை அல்லது ஊனமுற்றோருக்கான சேவைகளை வழங்கும் பதிவு செய்யப்பட்ட மற்றொரு அற நிறுவனத்தின் அட்டை
- மருத்துவமனை அட்டை அல்லது பதிவு
- இரண்டாம் நிலைக்குப் பிந்திய கல்வி நிறுவனமொன்றில் மாணாக்கர் வதிவிடத்துக்குப் பொறுப்பான அலுவலகத்தால் அல்லது அலுவலர்களால் வழங்கப்படும் பல்கலைக்கழக வதிவிடத்தைக் காட்டும் ஆவணம்
- 2007 இன் நீண்ட காலப் பராமரிப்பு இல்லங்கள் சட்டத்தின் கீழ் இல்லத்தின் நிருவாகியால் வழங்கப்படும் ஒரு நீண்ட காலப் பராமரிப்பு இல்லத்தில் வதிவைக் காட்டும் ஆவணம்
- நீர்மின், நீர், எரிவாயு, தொலைபேசி அல்லது வடத் தொலைபேசி என்பவற்றுக்கான ஒரு பயனீட்டு விலைப்பட்டியல் அல்லது பொதுப் பயனீடுகளிலிருந்து ஒரு விலைப்பட்டியல்
- தொழில் வழங்குநரால் வழங்கப்படும் ஒரு காசோலைக் குறிப்பு, T44 கூற்று அல்லது சம்பளச் சிட்டை
- இரண்டாம் நிலைக்குப் பிந்திய ஒரு பாடசாலையால் வழங்கப்படும் தேர்ச்சியறிக்கை அல்லது அறிக்கை